முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 87 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்

### புள்ளி வழங்கும் திட்டம்




இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020**

**87 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

**1 ஆம் வினாத்தாளின் 40 வினாக்கள்**

1 x 40 = 40 புள்ளிகள்

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் வீதம் பத்து வினாக்கள் 2 x 10 = 20 புள்ளிகள்

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு 4 x 10 = 40 புள்ளிகள்

**மொத்தம் 100 புள்ளிகள்**

**பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்**

(2 ஆம் வினாவில் இருந்து 7 ஆம் வினா வரை)

| | | |
|---|---|---|
| (i) - | பகுதி | 01 புள்ளிகள் |
| (ii) - | பகுதி | 02 புள்ளிகள் |
| (iii)- | பகுதி | 03 புள்ளிகள் |
| (iv)- | பகுதி | 04 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

| | | | |
|---|---|---|---|
| **வினாத்தாள்** I | **மொத்தம்** | **40 புள்ளிகள்** |
| **வினாத்தாள்** II | **மொத்தம்** | **60 புள்ளிகள்** |
| | | **100 புள்ளிகள்** |

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................
..........................................................................
..........................................................................  ✓  △ $\frac{4}{5}$

(ii) ..........................................................................
..........................................................................
..........................................................................  ✓  △ $\frac{3}{5}$

(iii) ..........................................................................
..........................................................................
..........................................................................  ✓  △ $\frac{3}{5}$

**மொத்தம்** ⟶ ☐ $\frac{10}{15}$

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# வினாத்தாள் வினாக்களும் தொடர்புடைய கற்றல் பேறுகளும்

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் - 87

## க.பொ.த. (சா/த) – 2020

### பகுதி I

1. தொடர்பாடல் என்பது இருவழிச் செயன்முறை என்பதை உதாரணங்களுடன் விளக்குவார்.
2. ஆதிகாலம் முதல் தற்காலம் வரை பயன்படுத்தப்பட்டுவரும் கட்புல, கட்புல - செவிப்புலத் தொடர்பாடல் வடிவங்களின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுவார்.
3. முறைசாராத் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றி மாதிரிகளுக்கூடாக விளக்குவார்.
4. நபரொருவரினுள் ஆளுள் தொடர்பாடல் நிகழும் விதம் பற்றிய உயிரியல் விஞ்ஞானக் கருத்துக்களை ஆய்வு செய்வார்.
5. தொடர்பாடல் செயன்முறையினை வினைத்திறன்மிக்க வகையில் மேற்கொள்வதற்குரிய வழிமுறைகளைக் குறிப்பிடுவார்.
6. தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்புகளை இனங்காண்பார்.
7. சிறப்பான வாழ்க்கை ஒன்றிற்காக ஆளுள் தொடர்பாடலை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை ஆராய்வார்.
8. ஊடக வெளியீடுகளைத் தயாரிப்பதுடன் தொடர்பான ஒழுக்கவிதிகளையும் ஊடக சட்டதிட்டங்களையும் பின்பற்றுவார்.
9. பத்திரிகை நிறுவனமொன்றின் உள்வாரிச் செயற்பாட்டை விபரிப்பார்.
10. அச்சு ஊடகம் என்ற வகையில் செய்திப் பத்திரிகைகளின் விசேட தன்மைகளை இனங்காட்டுவர்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

11. இன ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்க ஊடகம் செயற்படும் விதத்தை ஆராய்வார்.
12. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தை விளக்குவார்.
13. வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் தாக்கங்களை ஆய்வு செய்வார்.
14. வானொலி நிகழ்ச்சிகளின் வகைகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை மட்டத்தில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பார்.
15. ஊடக வெளியீடுகளைத் தயாரிப்பதுடன் தொடர்பான ஒழுக்கவிதிகளையும் சட்டதிட்டங்களையும் பின்பற்றுவார்.
16. ஊடக நிறுவனங்கள் தமது வணிக நோக்கத்தை வெளிப்படுத்தும் விதத்தைப் பகுத்தாய்வர்.
17. வானொலி ஊடகத்தின் தனித்துவ இயல்புகளை விபரிப்பார்.
18. அலுவலகத்தில் ஊடக சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்துவார்.
19. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தை விளக்குவார்.
20. தகவல் அறிக்கையிடலின் அவசியத்தை இனங்காட்டுவார்.
21. தகவல் அறிக்கையிடலின் அடிப்படை விழுமியங்களைப் பயன்படுத்தி, தகவல் ஒன்றை வெற்றிகரமாக அறிக்கையிடுவர்.
22. செய்தியின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செய்தியினை வகைப்படுத்துவார்.
23. வினைத்திறன்மிக்க வானொலி நிகழ்ச்சிகளை இனங்காண்பது பற்றி மற்றவர்களுக்கு அறிவூட்டுவார்.
24. இலங்கையில் ஊடக நிறுவனங்களின் தோற்றத்தை விபரிப்பார்.
25. வகுப்பறை ஊடக சாதனங்களின் அவசியத்தை விளக்குவார்.
26. வெகுசன ஊடக நிறுவனங்களின் உரித்தின் இயல்பை அறிவார்.

Department of Examinations-Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

27. சினிமா மற்றும் தொலைக்காட்சி ஊடகத்தில் நிலைத்த புகைப்படப் பாவனை பற்றி விபரிப்பார்.
28. ஊடக வெளியீடுகளைத் தயாரிப்பதுடன் தொடர்புடைய ஒழுக்கவிதிகளினதும், சட்டதிட்டங்களினதும் அமுலாக்கத்தின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவார்.
29. பல்வேறு அச்சு ஊடகங்களுடன் தொடர்பான உள்ளடக்கங்களையும் அவற்றின் பல்வகைகளையும் தொடர்புபடுத்தி இனங்காண்பார்.
30. ஊடக வெளியீடுகளின் தயாரிப்பிற்கான ஒழுக்கவிதிகளை இனங்காண்பார்.
31. வகுப்பறை ஊடக சாதனங்களின் அவசியத்தை விளக்குவார்.
32. பலவித நுட்பங்களைப் பயன்படுத்தி எழுத்தாற்றலை வெளிப்படுத்துவர்.
33. வினைத்திறன்மிக்க வானொலி நிகழ்ச்சிகளை இனங்காண்பது பற்றி மற்றவர்களுக்கு அறிவூட்டுவார்.
34. வானொலி ஊடகத்தின் தனித்துவ இயல்புகளை விபரிப்பார்.
35. ஊடக வெளியீடுகளின் தயாரிப்பதற்கான சட்டதிட்டங்களை உணர்ந்து கொள்வார்.
36. தொலைக்காட்சி ஊடகத்தின் புதிய போக்குகளையும் வளர்ச்சி அனுபவங்களையும் உள்வாங்குவார்.
37. தொடர்பாடல் வரலாற்றின் அபிவிருத்தியில் நடந்தேறிய மிகவும் முக்கிய சம்பவங்களை விபரிப்பார்.
38. அச்சு ஊடகம் என்ற வகையில் செய்திப் பத்திரிகைகளின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.
39. நிலைத்த புகைப்படக் கருவியின் தொழினுட்பச் செயற்பாடுகளை விபரிப்பார்.
40. ஊடகங்கள் சிறுவர் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை விமர்சனரீதியாக பகுத்தாய்வார்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations Sri Lanka

OL/2020/87-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

87 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II
Communication and Media Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** தொடர்பாடல் இரு வழிச் செயன்முறையாகும். இதன் கருத்து,
(1) தொடர்பாடலில் பெறுநர் ஒருவர் அவசியம் இருக்கவேண்டும் என்பதாகும்.
(2) பின்னூட்டம் ஒன்று இடம்பெறவில்லை என்பதாகும்.
(3) தொடர்பாடல் செய்பவர் பெறுநராகவும் இருக்கலாம் என்பதாகும்.
(4) தடை இழிவு மட்டத்தில் இருக்கிறது என்பதாகும்.

**2.** ஒரு வரைபடம் உரித்தாவது,
(1) எழுத்து, காட்சித் தொடர்பாடலுக்கு ஆகும்.
(2) முறைசாரா, காட்சித் தொடர்பாடலுக்கு ஆகும்.
(3) வாய்மொழிசாரா, முறைசார் தொடர்பாடலுக்கு ஆகும்.
(4) முறைசார், எழுத்திலமையாத தொடர்பாடலுக்கு ஆகும்.

**3.** ஒருவர் ஊடாக அதிகமானோருக்குத் தகவல்களைத் தொடர்பாடும் முறைசாராத் தொடர்பாடல் வழிமுறை
(1) கொத்தணிச் சங்கிலி மாதிரி (2) தனிச் சங்கிலி மாதிரி
(3) புறணிபேசுதல் சங்கிலி மாதிரி (4) நிகழ்தகவுச் சங்கிலி மாதிரி

**4.** பொருட்கோடல் செய்யும்போது தொடர்பாடலில் ஈடுபடுதல் உரித்தாவது,
(1) ஆளுள் தொடர்பாடலுக்கு ஆகும்.
(2) ஆளிடைத் தொடர்பாடலுக்கு ஆகும்.
(3) குழுத் தொடர்பாடலுக்கு ஆகும்.
(4) வெகுசனத் தொடர்பாடலுக்கு ஆகும்.

**5.** எவரொருவர் ஐம்புலன்கள் வழியாகக் கிடைக்கப்பெறும் செய்திகளை உள்வாங்கிக் கொண்டு விளங்கிக் கொள்ளுதல்,
(1) பொருட்கோடல் ஆகும். (2) புலக்காட்சி ஆகும்.
(3) தொடர்பாடல் ஆகும். (4) தாக்கம் ஆகும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**6.** தொலைக்காட்சி ஊடகத்தின் ஓர் பண்பு
(1) தொடர்பாடல் செய்பவரும் பெறுநரும் நேருக்கு நேர் சந்தித்தல் ஆகும்.
(2) நிச்சயித்த பெறுநர் குழுவொன்றைக் கொண்டிருத்தல் ஆகும்.
(3) இருவழித் தொடர்பாடல் நிகழ்தல் ஆகும்.
(4) பொதுவான செய்திகளை முன்வைத்தல் ஆகும்.

**7.** தொலைக்காட்சி நாடகமொன்றைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அதில் வரும் ஒரு காட்சி காரணமாக உங்களிடம் புன்முறுவல் ஏற்பட்டதாகக் கருதிக் கொள்க. இங்கு இடம்பெற்றது
(1) ஒரு நேரடி ஊக்கல் (2) ஒரு பின்னூட்டம்
(3) தூண்டலால் ஏற்பட்ட ஒரு துலங்கல் (4) இருவழித் தொடர்பாடல் ஒன்று

**8.** மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தில் தகவல்களை பெறுதல் வழங்கிடல் என்பவற்றை உறுதிப்படுத்தும் உறுப்புரை எண் யாது?
(1) 15 (i) (2) 15 (ii) (3) 19 (4) 21

**9.** செய்திப்பத்திரிகையொன்றின் செய்திப்பக்கம் செம்மையாக்கம் செய்யப்படுவது,
(1) பிரதம ஆசிரியரால் ஆகும். (2) பிரதி ஆசிரியரால் ஆகும்.
(3) ஒரு உதவி ஆசிரியரால் ஆகும். (4) ஒரு அலுவலக நிருபரால் ஆகும்.

**10.** செய்திப் பத்திரிகைகள் டப்லொய்ட் (Tabloid), புரோட்சீட் (Broad Sheet) என்றவாறு வகைப்படுத்தப்படும் போது அதற்கு அடிப்படையாக இருப்பது செய்திப்பத்திரிகையொன்றின்
(1) அளவு (2) வெளிவரும் காலம்
(3) மைய விடயம் (4) வாசகர்கள்

**11.** சகல மதங்களுக்கும் தேசங்களுக்கும் மதிப்பளித்தல், சட்டபூர்வமான தன்மை, மரியாதை, வாக்குரிமை ஆகிய விடயங்கள் நேரடியாகத் தொடர்புபடுவது,
(1) மனித உரிமைகளுக்காகும். (2) ஜனநாயகத்துக்காகும்.
(3) பிரஜாவுரிமைக்காகும். (4) இனவாதத்துக்காகும்.

**12.** நெடுங்கால ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சி வகை
(1) நேரடி வர்ணனை (2) செய்தி நிகழ்ச்சி
(3) மெய்மை நிகழ்ச்சி (4) விவரண நிகழ்ச்சி

**13.** ஊடகச் செய்திகளுடன் தொடர்புபடும்போது, விமர்சனத் திறன்மிக்க பெறுநரின் பண்பாக **அமையாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) செய்தியைப் பகுப்பாய்வு செய்தல்
(2) செய்தியைப் பொறுப்புடன் கையாள்தல்
(3) செய்தியை நிஜவாழ்க்கையுடன் ஒருங்கிணைத்தல்
(4) செய்தி உருவாக்கப்படுவதன் நோக்கங்களை இனங்காணுதல்

**14.** உங்களது பாடசாலையில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வை நேரலையாக ஒலிபரப்புச் செய்வதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய வானொலி நிகழ்ச்சி வகை
(1) செய்தி நிகழ்ச்சி (2) விவரண நிகழ்ச்சி
(3) அறிவிப்பு (4) வர்ணனை

**15.** தொலைக்காட்சி அலைவரிசையொன்றை ஸ்தாபித்தலில் அதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறும்போது நேரடியாக அதனுடன் தொடர்புபடும் நிறுவனம்
(1) வெகுசன ஊடக அமைச்சு
(2) தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
(3) அரசாங்க தகவல் திணைக்களம்
(4) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம்

**16.** ஊடகத் தொழிலின் வெற்றி சார்ந்திருப்பது, பெறுநர்களின்
(1) விருப்பு வெறுப்புக்களில் (2) வாடிக்கையாளர் பெறுமானத்தில்
(3) செய்திகளைப் பெறுவதில் (4) ஊடக விளங்கறிவில்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations-Sri Lanka


**17.** செய்திப்பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது வானொலி தனிச்சிறப்பாக அமைவதற்கான காரணம்,
(1) ஒலி பயன்படுத்தப்படுகின்றமை ஆகும்.
(2) புவியியல் வரையறைகளைக் குறைவாகக் கொண்டுள்ளமை ஆகும்.
(3) எழுத்தறிவு தேவைப்படாமை ஆகும்.
(4) தனியாளை மையமாகக் கொண்டிருத்தல் ஆகும்.

**18.** உங்கள் கையிலுள்ள ஓர் ஆவணத்தை அலுவலக இலச்சினையுடன் விரைவாக தொலைவிலுள்ள ஓரிடத்துக்கு அனுப்புவதற்குப் பயன்படுத்தத்தக்க உபகரணமானது,
(1) டிஜிற்றல் பிரதியெடுக்கும் இயந்திரம் ஆகும்.
(2) தபால் முத்திரையிடல் இயந்திரம் ஆகும்.
(3) இலத்திரனியல் பேஜர் ஆகும்.
(4) தொலைநகல் இயந்திரம் ஆகும்.

**19.** சுதந்திர தினத்தில் ஒளிபரப்புச் செய்வதற்கு தொலைக்காட்சி நாடகமொன்றை உருவாக்குவதற்கு உங்கள் பாடசாலை நாடகப்பிரிவிற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதற்குப் பொருத்தமான தொலைக்காட்சி நாடக வகை,
(1) ஆற்றுகை நாடகமாகும். (2) ஓரங்க நாடகமாகும்.
(3) பல்வகை அம்சங்களையுடைய நாடகமாகும். (4) மெகா நாடகமாகும்.

Department of Examinations-Sri Lanka

● **20** தொடக்கம் **22** வரையான வினாக்களுக்கு விடைளிக்க பின்வரும் தலைகீழ் கூம்பக வரிப்படத்தைப் பயன்படுத்துக.




**20.** ஒரு குறித்த செய்தியுடன் நேரடியாகத் தொடர்புப்பட்டவர்கள் பற்றிய விவரமான தகவல்களை உள்ளடக்குவதற்கு மிகவும் உகந்தது
(1) **A** (2) **D**
(3) **B** அல்லது **C** (4) **C** அல்லது **D**

**21.** செய்திப்பத்திரிகையொன்று அச்சிடப்படவிருந்த வேளையில், இன்னுமொரு முக்கிய செய்தி அறிக்கையிடப்பட்டதன் காரணமாக விவரமான தகவல்களை உள்ளடக்கிய செய்தியின் ஒரு பகுதியை அகற்ற வேண்டியிருந்தது. அவ்வாறு அகற்றுவதற்கு மிகவும் பொருத்தமான பகுதியாக அமைவது
(1) **A** (2) **D**
(3) **B** அல்லது **C** (4) **C** அல்லது **D**

**22.** இம்மாதிரி மிகவும் பொருத்தமாக அமைவது எந்தச் செய்தியினை அறிக்கையிடுவதற்காகும்?
(1) வன் செய்திக்கு (2) மென் செய்திக்கு
(3) உணர்வுசார் செய்திக்கு (4) சுற்றாடல்சார் செய்திக்கு

**23.** 'SFX - ஞாயிற்றுக்கிழமைச் சந்தை' என்பது,
(1) தொலைதூரப் படமாகும். (2) ஒலி விளைவாகும்.
(3) செம்மையாக்கல் வழிகாட்டியாகும். (4) தொடர்பாடல் தடையாகும்.

**24.** செய்திப்பத்திரிகை ஒன்றைப் பற்றிய கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- அது பிரதம ஆசிரியருக்கு சொந்தமான செய்திப்பத்திரிகை.
- அது 1909ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- H.S பெரேரா அதன் முன்னோடி ஆவார்.

மேற்குறித்த விடையங்களுடன் தொடர்புடைய செய்திப்பத்திரிகை
(1) ஞானார்த்த பிரதீபா (2) சிங்கள பௌத்தய
(3) தினமின (4) லங்கா லோகய


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**25.** ரவி இயக்கி, இசையமைத்திருந்த ஒரு குறுந்திரைப்படத்தை வகுப்பறையினுள் காட்சிப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு அவசியம் பயன்படுத்தப்பட வேண்டிய உபகரணம்
(1) மேந்தலை எறிவை (2) வழுக்கி எறிவை
(3) தோற்றுருப்பெருக்கி (4) பல்லூடக எறிவை

**26.** அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை மாத்திரம் கொண்ட கூட்டத்தைத் தெரிவுசெய்க.
(1) ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னல், லங்காதீப செய்திப்பத்திரிகை
(2) தேசிய சேவை, லக்ஹண்ட வானொலி, ஐலண்ட் செய்திப்பத்திரிகை
(3) சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னல், லக்ஹண்ட வானொலி, லங்காதீப செய்திப்பத்திரிகை
(4) ரூபவாஹினி, லக்ஹண்ட வானொலி, சிலுமின செய்திப்பத்திரிகை


**27.** திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்பின்போது ஒப்பனை, ஆடையணிகள், அரங்கமைப்பு என்பவற்றைத் தொடர்ந்து பேணுவதற்கு மிகவும் பயன்படக்கூடியது
(1) படத்தொகுப்பு (2) நிலைத்த புகைப்படக்கலை
(3) இயக்குநரின் வகிபாகம் (4) எழுத்துருவின் தெளிவு

**28.** கொரோனா நோயினால் பீடிக்கப்பட்ட நபர்கள் பற்றி தொலைக்காட்சி வழியாக அறிக்கையிடும்போது, ஊடக அமைப்புக்கள் அவர்களின் தனிப்பட்ட அடையாளத்தை வெளிப்படுத்தாது இருக்கும் நடவடிக்கை ஊடக நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிலைமை நேரடியாகத் தொடர்புடையது,
(1) ஊடக ஒழுக்கவியலுடன் ஆகும்.
(2) தொடர்பாடல் தடையுடன் ஆகும்.
(3) உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதுடன் ஆகும்.
(4) புலக்காட்சியுடன் ஆகும்.

**29.** இலங்கையில் வெளியிடப்படும் நூலுக்கு ISBN (International Standard Book Number) இனை வழங்குவது,
(1) தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைச் சபை ஆகும்.
(2) புத்தக வெளியீட்டாளர்களின் சமூகம் ஆகும்.
(3) தேசிய சுவடிகள் திணைக்களம் ஆகும்.
(4) நூலகம், தகவல் விஞ்ஞானத் திணைக்களம் ஆகும்.

**30.** ஒரு புத்தகத்தின் காப்புரிமை பங்கு (Royality) என்பது,
(1) அச்சிடப்பட்ட பிரதிகளின் அரைப்பங்கினை படைப்பாளி பெறுதலாகும்.
(2) நூல் விற்பனையின் பின்னரான பணத்தின் அரைப்பங்கினை படைப்பாளி பெறுதலாகும்.
(3) அச்சிடப்படும் பிரதிகளின் அடிப்படையில் குறிப்பிட்டளவு பணத்தினை படைப்பாளி பெறுதலாகும்.
(4) படைப்பாளியின் மரணத்தின் பின்னரும் உரித்துடைமை பெறுதலாகும்.

**31.**



மேலே அடையாளங் காட்டப்படுவது யாதெனில்,
(1) ஒரு பட எறிவை என்பதோடு அதனைப் பயன்படுத்துவதற்கு முன் ஆயத்தம் தேவையாகும்.
(2) ஒரு மேந்தலை எறிவை என்பதோடு இதற்கு ஊடுகாட்டும் தாள் அவசியமாகும்.
(3) ஒரு பல்லூடக எறிவை என்பதோடு அதன் வில்லைகளை குவியப்படுத்தப்பட முடியும்.
(4) தோற்றுருப்பெருக்கி என்பதோடு அது தொலைவுக் கட்டுப்பாடு மூலம் இயக்கப்பட முடியும்.

Department of Examinations-Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**32.** சீன, கொரிய, ஜப்பானிய எழுத்துக்களை அறிமுகப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) முன் மானுட மொழிகளிலிருந்து தோற்றம் பெற்றன
(2) மேலைத்தேய மொழிகளின் வேர்களிலிருந்து வளம்பெற்றவை
(3) பட எழுத்துக்கள் அல்லது சித்திர எழுத்துக்களாக வளர்ச்சியடைந்தவை
(4) பேச்சு மொழியை அடிப்படையாகக் கொண்டு எழுத்து மொழியாகின

**33.** நிகழ்ச்சி ஒன்றினை ஒலிபரப்பும்போது புவியியல் எல்லைகள் பற்றி குறைந்தளவு கவனம் செலுத்தப்படுவது,
(1) டிஜிற்றல் வானொலியில் ஆகும். (2) இணைய வானொலியில் ஆகும்.
(3) சமூக வானொலியில் ஆகும். (4) பண்பலை வானொலியில் ஆகும்.

**34.** இராமன் பாடசாலை விடுமுறைக்காலத்தில் சினிமா, தொலைக்காட்சி என்பவற்றை விட வானொலி, செய்திப்பத்திரிகை என்பவற்றுடன் அதிகம் இணைந்திருந்தான். இக்காலப்பகுதியில் படைப்பாக்கச் சிந்தனைகள் அதிகளவு தோன்றியதாக அவன் உணர்ந்துக் கொண்டான். இதற்கான காரணமாக அமைவது
(1) கற்பனையாக்கம் (2) விளங்கிக்கொள்ளுதல்
(3) மீளப்பயன்படுத்தல் (4) மிகைப்படுத்துதல்

**35.** ஊடகச் செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் மறைமுகமாகத் தலையிடுவதைக் காட்டும் ஒரு சந்தர்ப்பம்,
(1) அவசரகால நிலைமையில் அரசியலமைப்பு ரீதியாகச் செய்திகளைக் கட்டுப்படுத்தலாகும்.
(2) தேசிய பாதுகாப்புக்கு எதிரான சந்தர்ப்பங்களில் தணிக்கையை விதித்தலாகும்.
(3) இலங்கை பத்திரிகைச்சபை மூலம் ஒழுக்கக்கோவையொன்றை முன்வைத்தலாகும்.
(4) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஊடக அலைவரிசைகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதலாகும்.

**36.** கொரோனா பெருந்தொற்றினை எதிர்கொள்வதற்காக கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான ஊடகத் தொகுதி
(1) செய்திப்பத்திரிகையும் வானொலியும். (2) வானொலியும் தொலைக்காட்சியும்.
(3) தொலைக்காட்சியும் இணையமும். (4) செய்திப்பத்திரிகையும் இணையமும்.

**37.** தொடர்பாடல் வரலாற்றின் சில திருப்புமுனைகள் பின்வருமாறு.
A - பேச்சு மொழியை உருவாக்குதல்
B - கடதாசியைக் கண்டுபிடித்தல்
C - சித்திர வடிவ எழுத்துக்களை உருவாக்குதல்
D - அரிச்சுவடியை உருவாக்குதல்
இவற்றின் கால வரிசை முறையே
(1) A, B, C, D (2) A, C, B, D (3) A, C, D, B (4) C, A, B, D

**38.** ஒரு செய்திப்பத்திரிகையில் இடம்பெறும் பல்வேறு தகவல்கள் பற்றி கருத்துக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன
A - நகைச்சுவையையும் பரிகாசத்தையும் வெளிப்படுத்தித் தகவல் படைப்பாக்கபூர்வமாக முன்வைக்கப்படுகின்றது
B - செல்வாக்குச் செலுத்தக்கூடிய தகவல்களுடன் அது எழுதப்படுகின்றது
C - செய்திப்பத்திரிகை கொண்டிருக்கும் சந்தத்தை அடையாளங் காணத்தக்க ஓர் ஆவணம் இதுவாகும்

மேற்குறித்த கூற்றுக்களுடன் தொடர்பான வடிவங்கள் முறையே,
(1) கேலிச்சித்திரங்கள், செய்திகள், ஆசிரியர் தலையங்கம் ஆகும்.
(2) புகைப்பட அறிக்கை, பத்திகள், செய்திகள் ஆகும்.
(3) சித்திரிப்புக் கட்டுரைகள், செய்திகள், பத்திகள் ஆகும்.
(4) கேலிச்சித்திரங்கள், சித்திரிப்புக் கட்டுரைகள், ஆசிரியர் தலையங்கம் ஆகும்.

Department of Examinations Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**39.** புகைப்படத்தின் ஒளிக்கு ஆளாகும் செயன்முறைக்குரிய ஒரு செயற்பாடு

(1) புகைப்படச் சட்டகத்தில் இடம்பெறும் விடயங்களைத் தகுந்தவாறு ஒழுங்குபடுத்துதல்.
(2) புகைப்படத்தில் அகப்படுத்த வேண்டிய விடயம் என்ன என்பது பற்றித் தீர்மானித்தல்.
(3) புகைப்படத்தில் அகப்படுத்தும் நோக்கங்கள் தெளிவாக இருக்குமாறு வில்லைகளைக் குவியப்படுத்துதல்.
(4) வில்லையின் துவாரத்தினதும் துவாரப் படலையினதும் அமைவுகளை உகந்தவாறு தயார் செய்து ஒளியைக் கட்டுப்படுத்துதல்.

**40.** பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.

A - பெறுநரின் நடத்தையை மாற்றுகின்றது.
B - தனிப்பட்ட நிகழ்ச்சிநிரலைக் கட்டுப்படுத்துகின்றது.
C - பெறுநரின் எண்ணங்களையும் உளப்பாங்குகளையும் கட்டுப்படுத்துகிறது.
D - பெறுநர்களின் துலங்கல்களைக் கருத்திற்கொள்கிறது.

மேற்குறித்த கூற்றுக்களில் ஊடகங்கள் பெறுநரிடம் கொண்டுள்ள விளைவுகளைக் காட்டுபவை

(1) A, B ஆகியன மாத்திரம்
(2) A, B, C ஆகியன மாத்திரம்
(3) B, C, D ஆகியன மாத்திரம்
(4) C, D ஆகியன மாத்திரம்

※※

Department of Examinations-Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 87 | විෂයය<br>பாடம் | தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் |
|---|---|---|---|

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** | ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** | ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** | ප්‍රශ්න අංකය<br>**வினா இல.** | පිළිතුරෙහි අංකය<br>**விடை இல.** |
|---|---|---|---|---|---|---|---|
| **01.** | 3 | **11.** | 3 | **21.** | 2 | **31.** | 2 |
| **02.** | 1 | **12.** | 4 | **22.** | 1 | **32.** | 3 |
| **03.** | 3 | **13.** | 3 | **23.** | 2 | **33.** | 2 |
| **04.** | 1 | **14.** | 4 | **24.** | 3 | **34.** | 1 |
| **05.** | 2 | **15.** | 2 | **25.** | 4 | **35.** | 3 |
| **06.** | 4 | **16.** | 2 | **26.** | 4 | **36.** | 3 |
| **07.** | 3 | **17.** | 4 | **27.** | 2 | **37.** | 3 |
| **08.** | 3 | **18.** | 4 | **28.** | 1 | **38.** | 1 |
| **09.** | 3 | **19.** | 2 | **29.** | 1 | **39.** | 4 |
| **10.** | 1 | **20.** | 3 | **30.** | 3 | **40.** | 2 |

Department of Examinations-Sri Lanka

**විශේෂ උපදෙස්** } **එක් පිළිතුරකට ලකුණු** **01** **බැගින්**
விசேட அறிவுறுத்தல் } ஒரு சரியான விடைக்கு **01** புள்ளி வீதம்

**මුළු ලකුණු** / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

**නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව**
சரியான விடைகளின் தொகை

$\frac{25}{40}$

**I පත්‍රයේ මුළු ලකුණු**
பத்திரம் I இன் மொத்தப்புள்ளி

$\frac{25}{40}$



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி - II

வினா – 01

1. தொடர்பாடலின் அடிப்படைப் பணிகளை விபரிப்பார்.
2. பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிச்சேவை நிகழ்ச்சிகளின் தரம் தொடர்பாக விமர்சனரீதியான கருத்துக்களை முன்வைப்பார்.
3. வெகுசன ஊடகச் செயற்பாடுகளில் அரசின் தலையீடு பற்றி கருத்துக்களை முன்வைப்பார்.
4. ஊடகப் படைப்பாக்கங்களை பயன்படுத்தும்போது சட்டம் மற்றும் ஒழுக்கதர்மத்துடன் செயற்படுவார்.
5. ஆளுள் தொடர்பாடல் நடைபெறும் பல்வேறு சந்தர்ப்பங்களை இனங்காண்பார்.
6. தொடர்பாடல் செயன்முறையின்போது வாயிற்காப்பு எண்ணக்கரு மற்றும் இடையூறுகள் நடைபெறும் விதம் பற்றி விளக்குவார்.
7. பத்திரிகை ஊடகத்தின் படைப்பாக்க விதிகளை முன்வைப்பார்.
8. புதிய ஊடகங்களால் ஏற்பட்டுள்ள ஊடக இணைவு பற்றி விமர்சனரீதியாகக் கருத்துக்களை முன்வைப்பார்.
9. வானொலி ஊடகத்திற்கு அவசியமான அளிக்கைசார் உபாயவழிகளைக் குறிப்பிடுவார்
10. இலங்கைக்குப் பொருத்தமான ஆண் - பெண் சமூகத் தன்மை பற்றிய கருத்துக்களை வெளியிட தொலைக்காட்சி ஆற்றும் சேவையை ஆராய்வார்.

Department of Examinations-Sri Lanka

வினா – 02

1. குழு/ கூட்டுத் தொடர்பாடலின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகளைக் கண்டறிவார்.
2. அலுவலகமொன்றில் நடைபெறும் ஊடகச் செயன்முறை பற்றி விபரிப்பார்.
3. செய்தி அறிக்கையிடலுடன் தொடர்புடைய தேர்ச்சிகளை முன்வைப்பார்.
4. அச்சு ஊடகங்கள் என்றவகையில் சுவரொட்டி மற்றும் துண்டுபிரசுரம் என்பவற்றின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

வினா – 03

1. பல்வேறு நியதிகளிற்கு அமைய செய்தித்தாள்களை வகைப்படுத்துவார்.
2. செய்தித்தாள் உள்ளடக்கத்தினைக் கவனத்திற்கொண்டு செய்தித்தாள் வடிவமைப்பைப் பிரயோகத்திறனுடன் மேற்கொள்வார்.
3. இலத்திரனியல் செய்தித்தாள் பயன்பாட்டின் பல்வேறு வடிவங்களையும் இயல்புகளையும் விளக்குவார்.
4. செய்தித்தாள் ஊடகத்தின் ஆக்கபூர்வமான வடிவ அமைப்புக்களை இனங்காண்பார்.

வினா – 4

1. வெகுசனத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குவார்.
2. மொழியின் இரு வடிவங்களை வேறுபடுத்தி இனங்காணுவார்.
3. வினைத்திறன்மிக்க ஓர் ஆவணத்தின் இயல்புகளை இனங்காணுவார்.
4. தொடர்பாடலின் நோக்கங்களை விளக்குவார்.

Department of Examinations-Sri Lanka

வினா – 05

1. இலங்கையின் பிரதான ஊடக நிறுவனங்களை இனங்காண்பார்.
2. ஊடக ஆக்கங்களுடன் இணைந்த சட்டதிட்டங்களை முன்வைப்பார்.
3. வகுப்பறை ஊடகப் பயன்பாட்டுத் தேர்ச்சி பெறுவார். (எறிகை வகை)
4. அலுவலகத்தில் ஊடக சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்துவார்.

வினா – 06

1. ஊடக வெளியீடுகளின் தயாரிப்பிற்கான ஒழுக்கவிதிகளை இனங்காண்பார்.
2. ஊடகங்களுக்கு பெறுநர் காட்டும் துலங்கல் தொடர்பாக பல்வேறு இயல்புகளை மதிப்பீடு செய்வார்.
3. வெகுசன மற்றும் புதிய ஊடக இயல்புகளை ஒப்பீட்டுரீதியாக ஆராய்வார்.
4. ஆக்கங்களின் படைப்பாற்றல் பண்புகளை மேம்படுத்தப் பிரயோகிக்கக் கூடிய பல்வேறு முறையியல்களை இனங்காண்பார்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

வினா – 7

1. வாய்மொழித் தொடர்பாடலின் வெற்றிக்காகப் பயன்படும் உபாயங்களைப் பகுத்தாய்வார்.
2. வானொலி ஊடக நிகழ்ச்சி வடிவங்களின் உள்ளடக்கத்தை விபரிப்பார்.
3. தகவல் திரட்டும் நபர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகளை மதிப்பிடுவார்.
4. ஊடகங்கள் சிறுவர்களிடம் ஏற்படுத்தும் தாக்கங்களை விமர்சனரீதியாக விபரிப்பார்.

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## புதிய பாடத்திட்டம்
## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

**1.** பெண் ஊடகவியலாளர் ஒருவரின் சமூக அநீதிக்கு எதிரான போராட்டம் என்பது சிங்கள மொழியில் பின்னணிக்குரல் ஒலிக்கலவை (Dubbing) செய்து ஒளிபரப்பப்படும் ஒரு இந்திய தொலைக்காட்சி நாடகத்தின் கதையாகும்.

(i) தொலைக்காட்சி நாடகமொன்றின் மூலம் எதிர்பார்க்கப்படும் தொடர்பாடல் செயற்பாடு யாது?

பொழுதுபோக்கு

(2 × 1 = 2 புள்ளிகள்)

(ii) மேற்குறித்த தொலைக்காட்சி நாடகம் குறைந்த செலவுடன் கூடுதலான அங்கங்களுடன் ஒளிபரப்பப்படுமெனில் அதற்குரித்துடைய தொலைக்காட்சி நாடக வகை எது?

தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் / மெகா தொடர்கள்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புச் செய்யும்போது, அரசாங்கத்தின் நேரடித் தலையீட்டை எடுத்துக்காட்டும் விதம் யாது?

வரி அறவிடுதல்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iv) மேற்படி உருவாக்கத்திற்கு ஒத்ததாக, உள்ளூரில் நாடகமொன்றைத் தயாரிப்பவரின் பொருளாதார உரிமையையும் ஒழுக்கவியல் உரிமையையும் உறுதிப்படுத்தும் பிரதான சட்டநிலை யாது?

புலமைச் சொத்துச் சட்டம்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(v) தொலைக்காட்சி நாடகம் தொடர்பாகக் கேட்கப்பட்ட ஓர் வினாவுக்கு விடை அளிப்பதன் மூலம் பரிசொன்றை வெல்வதற்கு நேயர் ஒருவர் நினைத்தார். இந்த எண்ணம் எந்தத் தொடர்பாடல் வகைக்கு உரியது?

ஆளுள் தொடர்பாடல்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(vi) மின்னல் காரணமாக தொலைக்காட்சி நாடகத்தைப் பார்த்தல் தடைப்பட்டது. இது எவ்வகைத் தொடர்பாடல் தடை ஆகும்?

ஊடகத் தடை (2 × 1 = 2 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(vii) தொலைக்காட்சி நாடகத்தின் படைப்பாக்க பண்புகள் பற்றிய ஒரு திறனாய்வு செய்திப்பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டிருப்பின், அக்கட்டுரையின் வடிவம் யாது?

சிறப்புக் கட்டுரை / விமர்சனக் கட்டுரை / திறனாய்வுக் கட்டுரை

(2 × 1 = 2 புள்ளிகள்)

(viii) தொலைக்காட்சி நாடகத்தை ஒளிபரப்புச் செய்த பின்னர் ஒரு குறுகிய காலத்தில் அது சமூக ஊடகத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. வெகுசன ஊடகத்துக்கும் சமூக ஊடகத்துக்கும் இடையில் உள்ள சேர்மான எண்ணக்கருவை விளக்கப் பயன்படுத்தக்கூடிய பதம் யாது?

ஊடக ஒருங்கிணைவு / இணைந்த ஊடகம்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(ix) மேற்குறித்த தொலைக்காட்சி நாடகத்தை வானொலி நாடகமாக மாற்றும்போது பயன்படுத்தத் தக்க **இரண்டு** பிரதான ஒலி வகைகளைப் பெயரிடுக.

இயற்கை ஒலி, இசை, மனித குரல், ஒலி விளைவுகள், மௌனம் அல்லது நிசப்தம்

(2 × 1 = 2 புள்ளிகள்)

(x) மேற்குறித்த தொலைக்காட்சி நாடகத்தில் பெண் ஊடகவியலாளரின் வகிபாகம் பற்றிக் கற்கும்போது பயன்படுத்தத் தக்க சமூகவியல் எண்ணக்கரு யாது?

பால்நிலை எண்ணக்கரு / ஆண் – பெண் சமூகத்தன்மை

(2 × 1 = 2 புள்ளிகள்)

**(மொத்தப் புள்ளிகள் 2 x 10 = 20 புள்ளிகள்)**

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**2.** தேர்தல் பரப்புரையின்போது வேட்பாளர் ஒருவர் ஊடகப் பிரசாரம் தொடர்பாக அவசியம் கவனம் செலுத்த வேண்டும்.

(i) மக்களுக்கு உரையாற்றும்போது வேட்பாளர் தனக்கு முன்பாக உள்ள மக்களுடன் கண்கள் மூலம் தொடர்பு கொள்கிறார். இச்செயலை விபரிக்கப் பயன்படும் பதம் யாது?

- கலங்ரை விளக்க எண்ணக்கரு அல்லது உத்தி

(1 × 1 = 1 புள்ளி)

(ii) ஒரு தேர்தல் அலுவலகத்தின் ஊடகச் செயன்முறையுடன் தொடர்புடைய, தகவல்களை அடிப்படையாகக் கொண்ட **இரண்டு** செயற்பாடுகளைப் பெயரிடுக.

- தகவல்களைத் திரட்டுதல்.
- தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
- தகவல்களைக் களஞ்சியப்படுத்தல் / சேமித்தல்.
- தகவல்களை விநியோகித்தல்.
- தகவல்களின் நம்பகத்தன்மை, துல்லியத்தன்மையைச் சோதித்தல்.
- துல்லியமான தகவல்களை வழங்குதல்.
- துரிதமாக வழங்கக்கூடிய வகையில் தகவல்களைத் தகவமைத்தல்.
- தகவல்களின் செல்லுபடித்தன்மை உறுதிப்படுத்தப்படுதல்.
- தகவல்களின் சட்டப்பூர்வத்தன்மை உறுதிப்படுத்தப்படல்.

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) தேர்தல் தொடர்பாக செய்திப் புகைப்படம் ஒன்றை எடுத்தலில் கவனம் செலுத்த வேண்டிய **மூன்று** அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.

- துல்லியம்
- அழுத்தம் / வலுவாகத் தகவல்களை முன்வைக்கும் தன்மை
- அண்மைத்தூரம்
- மனித விருப்புகளைப் பிரதிபலிப்பதாக அமைதல்
- ஒப்பற்றத் தன்மை
- புதுமை
- மோதல்களை, முரண்பாடுகளைக் கவர்தல்

(விளக்கமளித்திருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.) (1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) தேர்தலில் சுவரொட்டிகளைப் பயன்படுத்துவதன் **நான்கு** அனுகூலங்களை உதாரணங்களுடன் விளக்குக

- விரைவாகத் தகவல் பெற்றுக்கொள்ள முடிதல்.
- பிரசாரங்களை முழு அளவில் மேற்கொள்ள முடிதல்.
- இலக்குக் குழுக்களைத் தூண்டக் கூடியதாயிருத்தல்.
- மக்களைக் கவரக்கூடியதாக இருத்தல்.
- இலகுவாக வாசிக்கக் கூடிய தோற்றத்தில் அமைந்திருத்தல்.
- ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் இலகுவாகத் தயாரிக்கக் கூடியதாக இருத்தல்.
- எழுத்தறிவு அற்றவர்களாலும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகின்றமை.
- குறித்த புவியியற் பிரதேசத்திற்குள் மாத்திரம் காட்சிப்படுத்தப்படும் வாய்ப்பு.
- தெரிவுசெய்யப்படும் இடங்களில் காட்சிப்படுத்தப்படுவதனால் சூழல் மாசடைதல் இழிவுபடுத்தப்படுதல்.

(உதாரணங்களுடன் விளக்கமளித்திருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.)

(1 × 4 = 4 புள்ளிகள்)

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**3.** செய்திப்பத்திரிகைகளுக்கும் புகைப்படங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு.

(i) வெளியிடப்படும் காலத்திற்கேற்ப செய்திப்பத்திரிகைகளின் **இரண்டு** வகைகளைப் பெயரிடுக.

- நாளாந்தம் – காலையில்
- நாளாந்தம் – மாலையில்
- நாளாந்த தினசரிகளின் வார இறுதி வெளியீடு
- வாராந்தம் தனித்து வெளியிடப்படுதல்
- இருவாரங்களுக்கு ஒரு முறை
- மாதாந்தம்
- வருடாந்தம் (½ × 2 = 1 புள்ளி)

(ii) ஒரு செய்திப்பத்திரிகை கட்டுரைக்காகத் தெரிந்தெடுக்கப்படும் புகைப்படமொன்றில் இருக்க வேண்டிய **இரண்டு** பிரதான இயல்புகளைத் தருக.

- தேவையான அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருத்தல்.
- அவசியமற்றவைகள் உட்படுத்தப்படாமை.
- புகைப்படத்தில் குறிப்பிட்ட விம்பத்திற்கு உயிரோட்டத்தை வழங்குதல்.
- முறையான கமரா கோணங்கள்
- முறையான ஒளிப்பிரவாகம் அல்லது ஒளிப் பயன்பாடு
- முறையான முன்வைப்பு அல்லது வெளியீடு
- உரிய சந்தர்ப்பத்தில் புகைப்படத்தைப் பதிவு செய்தல்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

(iii) சமகால இலத்திரனியல் செய்திப்பத்திரிகைகளின் பொதுவான அம்சங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விபரிக்குக.

- உடனடியாகச் செய்திகளை அறிந்து கொள்ளக்கூடியதாக இருத்தல்.
- இலத்திரனியல் செய்தி பத்திரிகைகளை வெளியிடுபவர்களால் அவற்றை களஞ்சியப்படுத்தக்கூடிய வசதி ( archive facilities )
- மீண்டும் மீண்டும் வாசிக்கும் வசதி
- தகவலுக்கேற்ற வகைப்படுத்தல்.
- தற்காலப்படுத்தல் / இற்றைப்படுத்தல் (update) வசதி காணப்படுதல்.
- வாசகர்களின் உடனடிப் பின்னூட்டம் அல்லது கருத்தாடலுக்கான சந்தர்ப்பம்.
- இணைப்பைச் சொடுக்குவதன் மூலம் விரிவான தகவலுக்குச் செல்லும் வாய்ப்பு (Hypertext)
- பயநர்கள் தமது தேவைக்கேற்பக் களஞ்சியப்படுத்தும் வசதி (copy or download facilities )

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) செய்திப்பத்திரிகையொன்றில் நிலைத்த புகைப்படங்களைப் பயன்படுத்துவதன் **நான்கு** அனுகூலங்களைத் தனித்தனியாக விளக்குக.

- கவருந்தன்மையுடன் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பு.
- இயற்கைத் தன்மை காணப்படுவதால் நம்பகத்தன்மையுடன் அமைதல்.
- இலகுவில் வாசகர்களைக் கவரக்கூடியதாக இருத்தல்.
- இலகுவில் அச்சுத் தொழினுட்பத்தினைப் பின்பற்றக்கூடியதாக இருத்தல்.
- எவராலும் இலகுவில் புரிந்துக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

(1 × 4 = 4 புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations-Sri Lanka

**4.** தொடர்பாடலின் இயல்பை விளக்குவதற்கு அதன் வகைகளையும் வடிவங்களையும் விளங்கிக் கொள்ளுதல் முக்கியமானதாகும்

(i) பொதுவான செய்திகள், ஒழுங்கமைந்த நிறுவனம் ஆகிய அம்சங்கள் காணப்படத்தக்க தொடர்பாடலின் வகை யாது?

வெகுசனத் தொடர்பாடல்

(1 × 1 = 1 புள்ளி)

(ii) எழுத்து மொழியின் முறைமையை எடுத்துக்காட்டும் **இரண்டு** அம்சங்களைக் குறிப்பிடுக.

- இலக்கண ஒழுங்கமைவில் அமைந்திருத்தல்.
- எழுத்துக் கூட்டொழுங்கு இருத்தல்.
- வரிசைகளுக்கிடையே இடைவெளிகள் சீராகக் காணப்படுதல்.
- எழுத்துக்களுக்கு உறுப்பு வடிவம் காணப்படுதல்.
- எழுதும்போது சொற்கள் சம இடைவெளிகள் விட்டு எழுதப்பட்டிருத்தல்.
- ஒரு வாக்கியத்தை மற்றைய வாக்கியத்திலிருந்து வேறு பிரித்துக் காட்டும் போக்குக் காணப்படுதல்.
- ஒரு பந்தி மற்றைய பந்தியிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டிருத்தல்.

(2 × 4 = 2 புள்ளிகள்)

(iii) வினைத்திறன்மிக்க ஆவணம் ஒன்றை இனங்காண்பதற்குப் பயன்படத்தக்க **மூன்று** காரணிகளை சுருக்கமாக தெளிவுபடுத்துக.

- சிக்கலற்றதாகவும் விளக்கமாகவும் இருத்தல்.
- எழுத்தாக்கத்துக்குப் பொருத்தமான மாதிரியும் ஆக்கத் தன்மையும்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கண விதிமுறைகள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) "தொடர்பாடலின் நான்கு அடிப்படைச் செயற்பாடுகள்" என்னும் தலைப்பில் 'அறிவொளி' என்னும் சஞ்சிகைக்குக் கட்டுரை ஒன்றைத் தயாரிக்குக.

- தகவல் வழங்குதல்.
- கல்வியூட்டுதல்.
- பொழுதுபோக்கு அளித்தல்
- தூண்டல் அல்லது கிளர்வூட்டல்
- சமூக மயமாக்கல்
- கருத்துப் பரிமாற்றம் / சம்பாஷணையும் கலந்துரையாடலும்
- பண்பாட்டு முன்னேற்றம்
- சமூக சக வாழ்வு

( மேற்கூறிய செயற்பாடுகளை உள்ளடக்கி, கட்டுரை வடிவில் எழுதப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக. )

(1 × 4 = 4 புள்ளிகள்)

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**5.** (i) இலங்கையின் முதலாவது தனியார் செய்திப்பத்திரிகை நிறுவனம் யாது?

- லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் / ANCL (Associate Newspapers of Ceylon Limited) / ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம் (1 × 1 = 1 புள்ளி)

(ii) உள்ளூரில் வெகுசன ஊடகங்களை ஸ்தாபித்தலானது இரண்டு வகைச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவை யாவை?

- பாராளுமன்றச் சட்டத்தின்படி கூட்டுத்தாபனமாக ஸ்தாபிக்கப்பட்டிருத்தல்.
- கம்பனிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக நிறுவப்பட்டிருத்தல்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

(iii) வெகுசன ஊடக நிறுவனம் ஒன்றின் உள்ளக ஊழியர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பல்லூடக எறிவையைப் பயன்படுத்துவதன் **மூன்று** அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

- பெரிய திரையில் எறிவை மேற்கொள்ளப்படக்கூடியதாயிருத்தல்.
- எழுத்து, ஆவணப் பதிவுகள், ஒலி, அசையும் உருவங்கள், வீடியோ, சினிமா, நேரடி ஒளிபரப்புக் காட்சிகள் போன்ற அனைத்தையும் எறியப்படுத்த முடியுமாயிருத்தல்.
- தொலைவிலுள்ள கட்டுப்பாட்டாளர் மூலம் இயக்கக் கூடியதாக உள்ளமை.
- மிகவும் கவர்ச்சிகரமாகவும் நேரடியானதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் உள்ளமை.
- வர்ணங்களிலான படங்களை எறியப்படுத்த முடியுமாயிருத்தல்.
- நிலைத்த, அசையும் பட உருக்களை எறியப்படுத்தும் வாய்ப்பு.
- ஒலியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) வெகுசன ஊடக நிறுவனமொன்றின் உள்ளகச் செயற்பாடுகளுக்கு பின்வரும் உபகரணங்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்துவதன் தேவைகள் **இரண்டைத்** தனித்தனியாகச் சுருக்கமாக விவரிக்குக.

- தின முத்திரைக் கருவி
- பதவி முத்திரைக் கருவி
- தபால் முத்திரையிடல் இயந்திரம்
- காசுப் பதிவு இயந்திரம்

**திகதி முத்திரைக் கருவி**

- கடிதம் கிடைத்த திகதியை உறுதிப்படுத்தல்.
- அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் அனுப்பப்படும்போது திகதியைப் பதிவு செய்து கொள்ள முடிதல்.
- தாமதமாகக் கிடைக்கும் கடிதங்களை இனங்காண முடிதல்.
- கடிதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் கால அளவை அறிந்து கொள்ளக் கூடியதாக இருத்தல்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**பதவி முத்திரைக் கருவி**

- கடிதத்தில் கையொப்பமிடும் அதிகாரியின் கையொப்பத்திற்கு உத்தியோகபூர்வமானதும் சட்ட பூர்வமானதுமான தன்மையை வழங்க முடிகின்றமை.
- கடிதத்தில் கையொப்பமிடுபவரின் பெயர், பதவி, நிறுவனம் என்பவற்றை அறிய முடிதல்.

**தபால் முத்திரையிடல் கருவி**

- வினைத்திறன் மிக்க தபால் சேவையொன்றை மேற்கொள்வதற்கு உதவும்.
- தினசரி பெருந்தொகையான கடிதங்களை அஞ்சலிடும் பாரிய அலுவலகங்களுக்கு அவற்றுக்கான தபால் முத்திரைகளை பயன்படுத்துவது எளிதாக இருக்கின்றமை.
- முத்திரை ஒட்டும் காலம் மீதப்படுத்தப்படல்.
- ஏமாற்று வேலைகள் தவிர்க்கப்பட முடிதல் / தவறுதலாக வேறிடத்தில் முத்திரைகளைத் தவறவிடுவது தவிர்க்கப்படுதல்.

**காசுப்பதிவு இயந்திரம்**

- கொடுக்கல், வாங்கல் தகவல்களை நினைவில் இருத்திக்கொள்ள முடிகின்றமை.
- நிதி கையாள்பவர் எவ்வித நிதிக் கையாடல்களிலும் ஈடுபடாது தவிர்க்கப்பட முடிதல்.
- அச்சுச் சீட்டையும் இயந்திரத்தின் பதிவையும் ஒப்புநோக்கக் கூடியதாக இருத்தல்.
- காசுப் பரிவர்தனைகளை துரிதமாக மேற்கொள்ள முடியும்.
- காசுப் பரிவர்த்தனைகளை துல்லியமாக மேற்கொள்ள முடியும்.

(தனித்தனியாக, சுருக்கமாக விவரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கவும். )

(1 × 4 = 4 புள்ளிகள்)

Department of Examinations Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**6.** (i) இலங்கையில் அச்சு ஊடகங்கள் தொடர்பான ஒழுக்கவியல் கோவை ஒன்றைப் பெயரிடுக.

- இலங்கை பத்திரிகைப் பேரவையின் ஒழுக்கநெறிக் கோவை.
- இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்கநெறிக் கோவை / இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கநெறிக் கோவை.
- சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஒழுக்கநெறிக் கோவை.
- சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் ஒழுக்கநெறிக் கோவை.

(1/2 × 2 = 1 புள்ளி)

(ii) செய்திப்பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்ட கட்டுரை ஒன்று தொடர்பான துலங்கலைக் காட்டுவதற்குப் பயன்படுத்தத்தக்க **இரண்டு** முறைகளைத் தருக.

- அஞ்சலட்டை
- தொலைபேசி அழைப்பு
- மின்னஞ்சல்
- குறுஞ்செய்தி
- சமூக வலைத்தளங்கள் / இணைய தளங்களினூடாகத் துலங்கல் வெளிப்படுத்தல்.
- செய்திப் பத்திரிகைகளுக்குக் கடிதங்கள் வரைதல் / ஆசிரியர் கடிதங்கள் வரைதல் (Letters to the Editors )
- கட்டுரைகளை எழுதித் துலங்கலை வெளிக்காட்டுதல்.
- நடை பவனி / ஆர்ப்பாட்டம் செய்தல்.
- வாசகர் வட்டங்களை அமைத்துக் கருத்துக்களை வெளிப்படுத்தல்.

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

(iii) வெகுசன ஊடகங்களிலிருந்து புதிய ஊடகங்கள் வேறுபடும் **மூன்று** விதங்களை தெளிவுபடுத்துக.

- கோளமய வரையறை இல்லாமை.
- பெறுநரின் விருப்பத்திற்கேற்பச் செய்திகளைத் தெரிவு செய்திட இயலுமாதல்.
- கணினி, திறன்பேசி போன்ற பல்லூடகக் கருவிகளின் துணையோடு பயன்பெற வாய்ப்புக் கிட்டுதல்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு இடத்திலும் இருந்து பயன்படுத்த முடியுமாயிருத்தல்.
- கோள ரீதியாகப் பரவுதல் நிகழும் வாய்ப்பு.
- தொடர்புபடும் சகலருக்கும் இடைவினையாகத் தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கும், தொகுப்பதற்கும், உருவாக்குவதற்கும் உள்ள ஆற்றல்.
- புதிய ஊடகங்கள் டிஜிட்டல் தளத்தைப் பயன்படுத்தி உருவாகியுள்ள அதேவேளை, வெகுசன ஊடகங்கள் அனைத்தும் டிஜிட்டல் தளத்தின் வழி உள்ளடக்கப்படாதிருத்தல்.

(1 × 3 = 3 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iv) படைப்பாக்கபூர்வமான தொடர்பாடலில் பயன்படுத்தத் தக்க வெளியீட்டு விதிகள் **இரண்டின்** வகைகளை உதாரணங்களுடன் விவரிக்குக.

**மொழிசார் வெளியீட்டு விதிகள்**

- உவமை
- உருவகம் போன்றவற்றுடன்

- விடுகதைகள்
- சிறுகதை
- கவிதை
- நாவல்
- நாடகம் ஆகிய வடிவங்களிலும் அமைதல்

**செவிப்புல வெளியீட்டு விதிகள்**

- மேளம் போன்ற இசைக்கருவிகளின் சத்தம்
- கூக்குரல், "ஊ" போன்ற சத்தங்கள்
- இசை
- வானொலி நாடகம்

**கட்புல வெளியீட்டு விதிகள்**

- எழுத்து
- அபிநயம்
- படம்
- சித்திரம்
- குறியீடுகள்
- சமிக்ஞை
- அட்டவணை
- வரைபடம்
- நாட்டிய நாடகம்

**கட்புல - செவிப்புல வெளியீட்டு விதிகள்**

- தொலைக்காட்சி
- திரைப்படம்
- திறன்பேசி
- கணினி
- இணையம்
- நாடகம்
- பொம்மலாட்டம்

(1 × 4 = 4 புள்ளிகள்)

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**7.** கொவிட் 19 பெருந்தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றில் மருத்துவர் ஒருவர் பல்வேறு முன்வைப்புத் திறன்களுடன் பல வெளிப்பாடுகளையும் பயன்படுத்தி அர்த்தமுள்ள உரையொன்றை நிகழ்த்தினார்.

(i) மேற்குறித்த வாய்மொழித் தொடர்பாடலில் போது மருத்துவர் பயன்படுத்திய மொழியின் வகை யாது?

கருத்து வெளிப்பாடு

(1 × 2 = 1 புள்ளி)

(ii) மேற்குறித்த பெருந்தொற்று நிலைமை தொடர்பிலான வானொலி அறிவிப்பு ஒன்றுடன் தொடர்பான **இரண்டு** பகுதிகளைக் குறிப்பிடுக.

- அறிவிப்பு (Spot Announcement)
- குறியீட்டு இசை (Jingles)
- விளம்பரம் (Advertisement)

(2 × 1 = 2 புள்ளிகள்)

(iii) தொற்று நோய் நிலைமை தொடர்பான தகவல்களைச் சேகரிப்பவராக நீங்கள் மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினால் நீங்கள் அவசியம் கொண்டிருக்கவேண்டிய **மூன்று** பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

- செய்தியை இனங்காணல்.
- தகவல் மூலாதாரங்கள் பற்றி அறிந்திருத்தல்.
- பொறுமை.
- சிறந்த அவதானிப்பாளாராயிருத்தல்.
- ஒழுக்கமுடையவராக இருத்தல்.
- பிறருடன் புரிந்துணர்வுடன் செயற்படல்.
- நேர முகாமைத்துவம்.
- புத்திக் கூர்மையுடைமை.
- பக்கச் சார்பின்மை.
- நிலையான உறுதித் தன்மை.
- தந்திரோபாயத்தன்மை.

(1 × 3 = 3 புள்ளிகள்)

(iv) மேற்குறித்த சூழ்நிலையின் விளைவாகச் சிறார்கள் அதிகமாகத் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்குத் தூண்டப்படுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகள் **இரண்டு** வீதம் விவரிக்குக.

**நன்மைகள்**

- பலவற்றையும் கண்களால் பார்த்து அறிந்திடப் பழகுதல்.
- இரசனையுணர்வு விருத்தியடைதல்.
- பழக்கவழக்கங்களைக் கற்பிக்கின்றது.
- இரசனையைக் கற்றுத் தருகின்றது.
- கல்வியை விருப்பத்திற்குரியதாக்குகின்றது.
- பண்பாட்டைக் கற்றுத் தருகின்றது.
- சமூக மயப்படுத்தலுக்கு உதவுகின்றது.

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**தீமைகள்**

- பாரம்பரியமான மொழிநடையில் மாற்றங்கள் ஏற்படுதல்.
- மேலைத்தேச இரசனைக்குப் பழக்கப்படுதல்.
- ஊடக நிகழ்ச்சிகளில் சித்திரிக்கப்படும் பாத்திரங்களைப் பின்பற்றி சிறுவர்கள் தம்மை வீர தீரர்களாக போலியாக எண்ணிக்கொள்ளுதல்.
- சமூக பண்பாட்டுக்குப் பொருந்தாத நாகரீகங்களின் அறிமுகம்.
- ஊடகங்கள் வாயிலாக வன்முறைசார்ந்த நிகழ்ச்சிகளை அடிக்கடி பார்ப்பதனாலும் வாசிப்பதனாலும் சிறுவர்கள் வன்முறைக்குத் தூண்டப்படுதல்.
- வினைத்திறனற்ற பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதன் காரணமாக தமது காலத்தையும் பணத்தையும் சிறுவர்கள் வீணாகச் செலவழித்தல்.
- ஊடகங்கள் வழியாக உயர்வாகக் கருதப்படுகின்ற ஆனால் தம்மால் நிறைவேற்றிக் கொள்ள இயலாத பயனுறுதியற்ற விருப்பங்களின் பின்னே அவற்றைத் துரத்திச் செல்வதன் காரணமாக சிறுவர்களின் வாழ்க்கை பாதிப்படைதல்.
- சிறுவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அடிமையாதல்.
- தொலைக்காட்சி வழியாகத் தாம் காணும் உலகினையே யதார்த்தம் என சிறுவர்கள் எண்ணுதல்.

(1 × 4 = 4 புள்ளிகள்)

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/